# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**

**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

61. இரா. வாணிபிரப்பா — 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. முனைவர். மு. ருக்மணி — 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. வே. அம்சவேணி — 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில்
சித்தாந்தக் கூறுகள்

64. முனைவர் ச. அரிச்சந்திரன் — 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. முனைவர் ஆ. சரவணன் — 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. முனைவர். நா. கீதா — 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. முனைவர் எஸ். குமரன் — 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம்
காட்டும் வாழ்க்கை

68. முனைவர் த.பிரியா — 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும்
கவிதையனுபவம்

69. மு. ஷாஜஹான் — 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும்
இடந்தலைப்பாடும்

70. இரா. மாலினி — 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக்
கதை மாந்தர்கள்

71. முனைவர் இரா. மணிமேகலை — 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. முனைவர் ச. கவிதா — 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர்
ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. முனைவர் கு. முத்துக்குமார் — 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. வெ. மைதிலி — 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. முனைவர் சு. சதீஷ்குமார் — 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 75. ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழர்களின் அருள்நெறிக் கருவூலங்களாகவும் கலைச் சின்னங்களாகவும் திகழ்வன கோயில்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவபெருமான், முருகன், திருமால் உள்ளிட்ட கடவுளர்களுக்குக் கோயில்கள் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. கோயில்கள் ஆகம அடிப்படையில் கட்டப்படுகின்றன. கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், நந்தி மண்டபம், கொடிமரம், பலிபீடம், கோபுர வாயில், திருச்சுற்று மாளிகை ஆகிய அங்கங்களை உள்ளடக்கியதாகக் கோயில்கள் கட்டப்படும். இவை அனைத்தும் தத்துவ அடிப்படையில் அமைந்தனவாகும். திருக்கோவில் தத்துவம் குறித்து பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் 'சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்' என்ற நூலில் 'வழிபாட்டு முறைகள்' எனும் தலைப்பின் கீழ் 'ஆலய வழிபாடு' என்ற உட்தலைப்பில் எடுத்துரைத்துள்ள கருத்துகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## கோபுரம்

திருக்கோயில்களில் கோபுரங்களை அமைக்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இல்லை. கோபுரம் என்ற கட்டுமான அமைப்பு பிற்காலச் சோழர் காலத்தில் உருவானது. ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி வாழ்த்தில்,

> *"கோயில் முன்னேழ் நிலை கொண்ட தோர் கோபுர*
> *வாயில் வகுத்த பிரான் மகன் வாழியே"*
> *(தக்கயாகப்பரணி, 809)*

என்று சோழர்கள் கோபுரங்கள் கட்டிய திறத்தைப் போற்றிப் பாடியுள்ளார். அதனைத் தொடர்ந்து விசயநகரப் பேரரசு காலத்தில்தான் கோபுரங்கள் மிகுதியாகக் கட்டப்பட்டன. கிருட்டிண தேவராயர் காலத்தில் இப்பணி பெருமளவில் வளர்ச்சியுற்றது. ஆதலால் இக்கோபுரம் 'இராயகோபுரம்' என்று அழைக்கப்பெற்று, பின்னர் 'இராசகோபுரம்' என மருவியது. கோபுரம் 'தூலலிங்கம்' என்று அழைக்கப்பெறுகின்றது. தொலைவில் தெரியும் கோபுரத்தை இறைவனாகக் கருதி வழிபட வேண்டும். கோபுரத்தை வழிபட்டு